## யூன் – 04– செவ்வாய்

### தூய பிரான்சிஸ் கரக்சியோலா

### நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன் (யோவா 17:4)

---

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 20 : 17 – 27

அக்காலத்தில் பவுல் மிலேத்துவிலிருந்து எபேசுக்கு ஆளனுப்பி, திருச்சபையின் மூப்பர்களை வரவழைத்தார்.அவர்கள் வந்ததும் அவர்களிடம் அவர் கூறியது. ”நான் ஆசியாவுக்கு வந்துசேர்ந்த நாள்முதல் இந்நாள்வரை எவ்வாறு உங்களிடம் நடந்துகொண்டேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.யூதர்களுடைய சூழ்ச்சிகளால் எனக்கு ஏற்பட்ட சோதனைகளின்போது மிகுந்த மனத்தாழ்மையோடும் கண்ணீரோடும் ஆண்டவருக்குப் பணிபுரிந்தேன். நன்மை பயக்குமொன்றையும் உங்களுக்கு நான் அறிவிக்காமல் விட்டு விடவில்லை. பொது இடங்களிலும் வீடுவீடாகவும் சென்று உங்களுக்குக் கற்றுக் கொடுத்தேன்.நம் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொள்ளுமாறும், மனம்மாறி கடவுளிடம் வந்து சேருமாறும் நான் யூதரிடமும் கிரேக்கரிடமும் வற்புறுத்திக் கூறினேன்.இப்போதும் தூய ஆவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்லுகிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடுமென்பது தெரியாது. சிறைவாழ்வும், இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகிறார்.என்னைப் பொறுத்த வரையில் எனது உயிரை ஒரு பொருட்டாக நான் மதிக்கவில்லை. இறையருளைப் பற்றிய நற்செய்திக்குச் சான்று பகருமாறு ஆண்டவர் இயேசு எனக்குக் கொடுத்த பணியை நிறைவேற்றி என் வாழ்க்கை ஓட்டத்தை முடிப்பதே என் விருப்பம்.இதுவரை நான் உங்களிடையே வந்து இறையாட்சியைப் பற்றி பறைசாற்றினேன். ஆனால் இனிமேல் உங்களுள் எவரும் என் முகத்தைப் பார்க்கப் போவதில்லை என்று நான் அறிவேன்.உங்களுள் எவரது அழிவுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்று இன்று நான் உங்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.கடவுளின் திட்டம் எதையும் நான் உங்களுக்கு அறிவிக்காமல் விட்டுவிடவில்லை.

**பதில்பாடல்:** உலகிலுள்ள அரசர்களே! கடவுளைப் புகழ்ந்தேத்துங்கள்

## நற்செய்தி : யோவான்17: 1 – 11

அக்காலத்தில் இயேசு வானத்தை அண்ணாந்து பார்த்து வேண்டியது ”தந்தையே, நேரம் வந்து விட்டது. உம் மகன் உம்மை மாட்சிப் படுத்துமாறு நீர் மகனை மாட்சிப்படுத்தும்.ஏனெனில், நீர் அவரிடம் ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலைவாழ்வை அருளுமாறு மனிதர் அனைவர்மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர்.உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு.நான் செய்யுமாறு நீர் என்னிடம் ஒப்படைத்திருந்த வேலையைச் செய்து முடித்து நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்.தந்தையே, உலகம் தோன்றும் முன்பே நீர் என்னை மாட்சிப்படுத்தியுள்ளீர். இப்போது உம் திருமுன் அதே மாட்சியை எனக்குத் தந்தருளும்.நீர் இவ்வுலகிலிருந்து தேர்ந்தெடுத்து என்னிடம் ஒப்படைத்த மக்களுக்கு நான் உமது பெயரை வெளிப்படுத்தினேன். உமக்கு உரியவர்களாய் இருந்த அவர்களை நீர் என்னிடம் ஒப்படைத்தீர். அவர்களும் உம் வார்த்தைகளைக் கடைப்பிடித்தார்கள்.நீர் எனக்குத் தந்தவை அனைத்தும் உம்மிடமிருந்தே வந்தவை என்பது இப்போது அவர்களுக்குத் தெரியும்.ஏனெனில் நீர் என்னிடம் சொன்னவற்றையே நான் அவர்களிடமும் சொன்னேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு நான் உம்மிடமிருந்து வந்தேன் என்பதை உண்மையில் அறிந்துகொண்டார்கள். நீரே என்னை அனுப்பினீர் என்பதையும் நம்பினார்கள். அவர்களுக்காக நான் வேண்டுகிறேன். உலகிற்காக அல்ல, மாறாக நீர் என்னிடம் ஒப்படைத்தவர்களுக்காகவே வேண்டுகிறேன். அவர்கள் உமக்கு உரியவர்கள். ”என்னுடையதெல்லாம் உம்முடையதே. உம்முடையதும் என்னுடையதே. அவர்கள் வழியாய் நான் மாட்சி பெற்றிருக்கிறேன். இனி நான் உலகில் இருக்கப்போவதில்லை. அவர்கள் உலகில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன். தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர்களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக் காத்தருளும்” என்றார்.

**தியானம்:** இறைமகன் யேசு தமது பணி என்ன என்பதனை நன்றாக அறிந்திருந்தார். கடைசிவரை அதனை நிறைவேற்றினார். பாடுபடும் முன்பு வேதனை உற்றவராக துன்பக் கிண்ணம் நீங்கும்படி செபித்தார். ஆனாலும் அப்படிப்பட்ட துன்பத்தை அவர் சந்திக்க வேண்டும் என்பது இறை சித்தமாக இருந்தது. இன்று நாமும் பலவகையான துன்ப கிண்ணத்தில் பருக வேண்டியவர்களாக இருக்கின்றோம், அது எம் வாழ்வை அலைக்களிக்கலாம். ஆனால் அவற்றை எல்லாம் நாம் சந்திக்க வேண்டும் என்பது கடவுளின் திட்டமாக இருந்தால் எம்மால் என்ன செய்ய முடியும். நாம் சந்திக்கும் துன்பம் எல்லாம் எமக்கு அல்லது எம்மை சார்ந்து உள்ளவர்களுக்கு ஒரு செய்தியாக அறிவுரையாக இருக்கலாம். உலகில் துன்பம் இல்லை என்றால் நாம் கடவுள் இருப்பதனையே மறந்து போய்விடுவோம். முதல் வாசகத்தில் புனித பவுல் அடிகளார் தமக்கு நிகழப் போகும் துன்பங்களை அறிந்திருந்தார். ஆனால் அதற்கு பயப்படாமல் தமது பணியை துணிவுடன் முன் எடுத்து சென்றார். எனவே எம் வாழ்வில் நாம் சந்திக்கும் அனைத்தும் கடவுளின் விருப்பப் படிதான் இடம் பெறுகின்றது என்பதனை அறிந்தவர்களாக வாழ வேண்டும். செதுக்கப் படாத கல் சிலையாக முடியாது. கல்லுக்கு வலிக்கும் என்று விட்டு விட்டால். அது வாழ்நாள் முழுவதும் கல்லாகவே இருக்கும். நாமும் துன்பங்களால், நோய்களினால் செதுக்கப் படுகின்றோம் என்பதனை உணர்ந்தவர்களாக, குயவன் கைகளில் மட் குடம்போல் படைத்தவர் கரங்களில் எம்மை ஒப்புவிப்போம்.